இந்தத் தாய்த் தமிழ்நாட்டை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உருவாக்கிட, தன்னலம் பாராமல் மெழுகுவர்த்திபோல, நாளொன்றும் 22 மணி நேரம் கண் துஞ்சாது பணியாற்றும்,

'நீங்க நல்லா இருக்கோணும் இந்த நாடு முன்னேற,

தமிழ்நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற,

இங்கு நல்லவங்க எல்லோரும் உங்க பின்னாலே

அம்மா, நீங்க நினைச்சதெல்லாம் நடக்குதுங்க

கண்ணு முன்னாலே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சியில் நானும் ஒரு தொண்டனாக இருந்து பணியாற்றும் வாய்ப்பு அளித்த காரணத்தாலே, காலத்தால் பெறுவதற்கரிய கன்னிப்பேச்சுக்கு அனுமதியளித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, வணங்கி, மகிழ்ந்து எனது உரையை விசுவாசம் கலந்த நன்றியுடன் நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11–25

4. அறிவிப்பு

பேரவை நிகழ்ச்சி நிரல், வினாக்கள் பட்டியல் உள்ளிட்ட பேரவைச் செயலக ஆவணங்கள் உறுப்பினர்களின் பிரத்தியேக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்கெனவே பிரத்தியேகமாக மின்னஞ்சல் முகவரியும் (E-mail address) இரகசியக் குறியீடும் (Password) வழங்கப்பட்டுள்ளன. இவற்றினை உறுப்பினர்கள் உபயோகப்படுத்தி இனி தங்களுக்கு வரும் மின்னஞ்சல்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

மேலும், முதன்முறையாக, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலிருந்து அனுப்பப்படும் நிகழ்ச்சி நிரல், வினாக்கள், கடிதங்கள், செய்தித் தாள்கள் உள்ளிட்ட அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளும் இனி மின்னஞ்சல்மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர்கள் அனைவரும்

2011 ஆகஸ்ட் 9] [பேரவைத் தலைவர்]
இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே உள்ள நடைமுறைப்படி, இச்செயலகத்திலிருந்து அனுப்பப்படும் நிகழ்ச்சி நிரல் உள்பட அனைத்துக் கடிதங்களும், தகவல்களும் தபால் மூலமும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2011—2012, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என் இதய தெய்வம் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கன்னிப் பேச்சைத் தொடங்கும் முன்னால் மரியாதைக்குரிய என் இதய தெய்வம், வாழ்வின் வழிகாட்டி, எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு, கேப்டன் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலையிலே சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, எங்கள் அமைப்பு, மன்றங்களாக இருந்தபோது, நகரத் தலைவராக்கி, பிறகு என்னை மாவட்டத் தலைவராக 15 ஆண்டுகளாகச் செயலாற்ற வைத்து, பிறகு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் துணைச் செயலாளராக ஆக்கி, இந்த மாபெரும் அவையிலே என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, பேசுவதற்கு வாய்ப்பளித்து அழகுபார்க்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய தலைவர் அவர்களே, என் வாழ்வின் ஒளி விளக்கே, உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு எனது கோடானுகோடி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் கன்னிப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்னாலே, காவல் துறை சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு இந்த ஆண்டு மே திங்கள் முதல் 24,099 புகார்கள் பெறப்பட்டு, நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்த திட்டத்தை வரவேற்கின்றேன்.